நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி)
(முழுக் கூடுதல் பொறுப்பு) செயல்முறைகள்
ஆணை பிறப்பிப்பவர் :- திரு. க. சரவணன், எம்.ஏ., பி.எல்.,

ந.க.எண். நி3/1958/2022 நாள். 22.02.2023.

திருவள்ளுவர் ஆண்டு – 2054,
சுபகிருது, மாசி – 10.

பொருள் :- பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - நாமக்கல் மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - ஊராட்சி ஒன்றியம் - எலச்சிபாளையம் - ஈஸ்வரன் (திரு) சீ, காசாளர் - பணி முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண்பருவம் துவக்குதல் - ஆணைவெளியிடப்படுகிறது.

படிக்க:-
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண். 2003/சிடி-அ1/2022, நாள்.25.11.2022.
2. அரசுக் கடிதம் (2ப) எண். 130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை, நாள். 09.12.2022.
3. நாமக்கல் மாவட்ட. ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். நி3/1958/2022, நாள். 03.01.2023.
4. எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கடிதம் ந.க.எண். 0041/2023/அ1, நாள். 06.01.2023.

❖❖❖

ஆணை:-

நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் 2021-2022ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை 2/ காசாளர் பதவிகளுக்கான மொத்த காலிப்பணியிடங்களில், 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்ட ஒரு காலிப்பணியிடத்திற்கு, மாவட்ட தெரிவுக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் திரு. சீ. ஈஸ்வரன் என்பவருக்கு, தேர்வாணைய இசைவுடன், மேலே (3)இல் படிக்கப்பட்டபடி, பணிமாற்றல் வழி எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இளநிலை உதவியாளர் நிலையில், காசாளராக பதவி உயர்வு அளித்து ஆணையிடப்பட்டது.

2. இதன்படி, தனியர், மேலே (4)இல் படிக்கப்பட்ட அறிக்கையின்படி, 04.01.2023 முற்பகல் எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் காசாளராகப் பணியில் சேர்ந்து கொண்டார்.

3. ஆகவே, **திரு. சீ. ஈஸ்வரன், காசாளர், ஊராட்சி ஒன்றியம், எலச்சிபாளையம்** என்பவருக்கு, தனியர், பணிமாற்றல் வழி காசாளராகப் பணியில் சேர்ந்த நாளான **04.01.2023 முற்பகல் முதல்** தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவு 28(1)ன்படி, இளநிலை உதவியாளர் நிலையில் பணியினை முறைப்படுத்தியும், அந்நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணிவிதிகளின் விதி32(a)(i)ன்படி, தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டு கால தகுதிகாண்பருவத்தினை துவக்கியும் இதன் வழி ஆணையிடப்படுகிறது.

(திருப்புக)

4. தனியர், தனது தகுதிகாண்பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண். 33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 02.03.2017இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத் தேர்வுகளில் கட்டாயம் தேர்ச்சி பெறுவதோடு, பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலைய அடிப்படைப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | தாள் குறியீடுஎண். | தேர்வு விவரம் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department – Tamilnadu Panchyat Act, 1994 & Rules and Constitution of India |
| 2. | 166 | The Panchyat Development Account Test. |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department – Scheme Administration. |
| 4. | 172 | The Tamilnadu Government Office Manual Test. |

5. இவ்வாணை குறித்து தனியரது பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொண்டு, அதன் விவரத்தினை (பணிப்பதிவேடு தொகுதி மற்றும் பக்க எண் விவரங்களை உள்ளடக்கி) பணிப்பதிவேட்டின் பக்க நகலுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திட எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி) ((மு.கூ.பொ),
நாமக்கல்.

22.02.2023

பெறுநர் - திரு. சீ- ஈஸ்வரன்,
காசாளர்,
ஊராட்சி ஒன்றியம், எலச்சிபாளையம் (அலுவலகம் வழியாக).

நகல் - 1. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், எலச்சிபாளையம்.
2. இவ்வலுவலக நி2 இருக்கை.
3. முக்கிய ஆணைத் தொகுப்பு / உபரி.

ந.க.எண்: 41/2023/அ1
நாள்: 27.02.2023
சார்வு செய்யப்படுகிறது

ஊராட்சி ஒன்றியம் எலச்சிபாளையம்

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், எலச்சிபாளையம்.
27.02.23

பெறுநர்: திரு சீ. ஈஸ்வரன்
காசாளர், எலச்சிபாளையம்
ஒன்றியம்.